# In the Court of the Additional District Munsif, Padmanabhapuram.

அ.வ.எண். 52/2020 தேதி-07.07.2025

(P.W.1) - அஜின்

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

எனது தாத்தா பொன்னையன் விலைக்கு வாங்கியதாக சொல்லியுள்ள சொத்தின் விபரம் எனக்கு தெரியும். அந்த ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ. 1 மற்றும் வா.சா.ஆ.2 ஆவணம் அல்ல அது வேறு ஆவணம். அப்படி ஒரு ஆவணம் இல்லாததால்தான் அதை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனது சத்திய பிரமாண வாக்குமூலத்தில் வழக்கு பட்டிகை சொத்தானது எனது தாத்தா பொன்னையன் என்பவருக்கு ஆவண எண் 8144/1960, 5920/1966, 35/1989 படி கைவம் வைத்து கரம் செலுத்தி அனுபவித்து வருவதாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி ஆவணம் எதையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

என்னுடைய தாத்தா எனக்கும் என்னுடைய அண்ணனுக்கும், எனது தங்கை அஜிஷாவிற்கும் இஷ்டதான பத்திர எண் 816/2004 ஆக ஆவணத்தின்மூலம் இஷ்டதானம் எழுதித்தந்ததாக அந்த கூட்டு அவகாசத்தில் என்னுடைய தங்கை அஜிஷா அவரின் அவகாசத்தை விடுதலை ஆவண எண் 735/2017 ஆக எனக்கு கொடுத்ததாக கூறியிருப்பது பற்றியும் அஜிஷா இந்த வழக்கின் கட்சியும் அல்லாமல் சாட்சியும் அல்லாமல் இருக்கிறது என்றால் சரியல்ல.

என்னிடம் காண்பிக்கப்படும் புகைப்படம் என்னுடைய சொத்து அல்ல. எனது வழக்கு பட்டிகை சொத்தில் ரப்பர் மரம் உள்ளது. அதனுடைய கிழக்கு பகுதியில் ரோடும் ஆறும் உள்ளது என்றால் சரிதான். மேற்படி ரோட்டின் கிழக்கு பகுதியில் ஜாண்சன் என்பவரின் சொத்து என்றால் சரிதான். பட்டிகை சொத்தின் கிழக்கு பகுதியில் ஆறும் சப்பாத்தும் உள்ளது என்றால் சரிதான். பட்டிகை சொத்தின் தெற்கு பகுதியில் ஆறு மற்றும் ஜார்ஜ் என்பவரின் சொத்து உள்ளது என்றால் சரிதான். மேற்கு பகுதியில் தாசையன் சொத்து உள்ளது என்றால் சரிதான். வடக்கு பகுதியில் கிறிஸ்டோபர் சொத்து உள்ளது என்றால் சரிதான். மேற்படி சொத்தின் மத்தியில் பிள்ளையார் கோவில் உள்ளது என்றால் சரியல்ல.

செல்வமணி நாடார் என்பவரை எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் கூறக்கூடிய பட்டிகை சொத்தானது செல்வமணி நாடார் என்பவருக்கு உரிமைப்பட்டது என்றால் சரியல்ல. பட்டிகை சொத்து கல்பமங்கலத்துமடம் அவர்களுக்கு உண்மையில் பாத்தியப்பட்ட சொத்து அவர்களிடமிருந்து செல்வமணிநாடார் விலைக்கு பெற்ற சொத்து என்றாலும் நான் கூறக்கூடிய எனது தாத்தா பொன்னையன் அவர்களுக்கும் எந்த அவகாசமும் உரிமையும் கிடையாது என்றால் சரியல்ல. எனது தாத்தா பொன்னையன் அவகாசத்தை புலப்படுத்த முன்போ பின்போ எந்த ஆவணமும் இல்லை என்றால் சரியல்ல.

பட்டிகை சொத்திலிருக்கும் ரப்பர் மரம் எவ்வளவு காலமாக அங்கிருக்கிறது என்றால் எனது தாத்தா காலத்திலிருந்தே இருக்கிறது. மேற்படி ரப்பர் தோட்டத்தை பொறுத்து ரப்பர் போர்டில் பதிவு செய்யப்பட்டிருக்கிறதா என்றால் பதிவு எதுவும் செய்யப்படவில்லை.

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளிற்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.